# எண்ணெய்ச் சிந்து

★

வெளியீடு:

மட்டக்களப்பு இந்துசமய விருத்திச் சங்கம்

1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எண்ணெய்ச் சிந்து

* சிவநாமாவளி

* சிவபுராணம்

மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கம்

மட்டக்களப்பு

1983 - துந்துபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENNAI SINTHU

Published by:

BATTICALOA HINDU WELFARE SOCIETY,

BATTICALOA.

Printed by:

CHETTIAR PRESS,

JAFFNA,

Price:

Rs. 3-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் பொன். சின்னத்துரை

அவர்களுக்கு

இந் நூல் காணிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

1958ம் ஆண்டு ஆவணித் திங்கள் 31ஆம் நாளன்று புளியந்தீவு இந்து சமய விருத்திச் சங்கம் என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டதும், பின்பு பலரின் வேண்டுதலுக்கு இணங்க மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கம் என்ற பெயரில் செயல்பட்டு வருவதுமான எமது சங்கத்தின் முதல் பிரசுரமான எண்ணெய்ச் சிந்து மக்களின் மேலான ஆதரவைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாண்டு — 1983 இல் வெள்ளிவிழாக் காணவிருக்கும் எமது சங்கத்தின் இந்த நூல் வெளியீடு முதல் முயற்சியாகும். இந்நூலைத் தொடர்ந்து மேலும் சில நூல்களை வெளியிட எண்ணியுள்ள எமது சங்கத்தின் வளர்ச்சிக்காக ஆரம்ப காலந் தொடக்கம் அயராது அரும்பணியாற்றிய முன்னை நாள் நிருவாக சபையினருக்கு இத்தருணத்தில் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் சங்கம் கால் நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்டது. கொழும்பு இந்து விவகார ஆலோசனைச் சபையாரால் 31-08-1958 ல் புளியந்தீவுப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் கடந்த கால வரலாறு கரடுமுரடானதும் கஷ்டங்கள் நிரம்பியதுமாகும். பல அல்லல்களுக்கும் தொல்லைகளுக்கும் மத்தியில் சங்கமும் சங்கம் நடாத்தும் ஞாயிறுதின சைவசமய பாட வகுப்பும் இயங்கிக் கொண்டு வருவதை இந்துப் பெருமக்கள் நன்கு அறிவார்கள் இந்த இந்துப் பொதுமக்களின் ஆதரவாலேயே இவ்வியக்கத்தின் நிகழ்ச்சிகள் நிகழ்கின்றதென்பதை நான் நன்றியுணர்வுடன் வெளிப்படுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

எமது சங்க வெளியீடாக இது மலர்ந்து மணம் பரப்புவதற்கு அனுமதி தந்தும், முன்னுரை வழங்கியும் அச்சுப் பிரதிகளைப் பார்வையிட்டும் பேருதவி புரிந்த தமிழறிஞர் வித்துவான் F. X. C. நடராசா அவர்களுக்கும் மன நிறைவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலை மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கம் அச்சிட்டு வெளியிட வேண்டும், மக்கள் மத்தியில் இதன் சீரமைமையைப் பரப்ப வேண்டுமென்று கடந்த ஐந்து ஆண்டுகளாக ஞாபகப்படுத்தி ஊக்குவித்த திரு ந. வேல்முருகு - சித்த ஆயுள்வேத வைத்தியர் அவர்கட்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி சொல்ல வேண்டியது அவசியமானதே

எம் சங்கக் காப்பாளரும், மேலான வழிகாட்டியுமாக எம்மால் கொள்ளப்பட்டுள்ள ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ அவர்கள் இந்

★

நூலுக்கு எனது வேண்டுதலை ஏற்று நல்லதொரு அணிந்துரை நல்கினார்கள். அவர்களுக்கும் நன்றி செலுத்துகின்றேன்.

சிறப்பாக, எழுத்துப் பிழைகள் இல்லாமல் பெரும் முயற்சி எடுத்து இந்நூலைக் குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்துதவிய யாழ்ப்பாணம் செட்டியார் அச்சகத்தாருக்கும் எம நன்றி.

சைவத் தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டுக் கலைப் பொக்கிஷமான எண்ணெய்ச் சிந்து என்னும் இந்நூலின் பின்னிணைப்பாக சிவநாமாவளி, சிவபுராணம் என்பவற்றையும் சேர்த்துள்ளோம். இந்நூல் எமது மக்களின் கைகளில் தினசரி திகழ வேண்டும், — சிவநாமாவளி, சிவபுராணம் என்பவற்றை ஒவ்வொரு நாளும் படித்து மக்கள் நற்பேறடைய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடேயே இவை பின்னிணைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சிறு நூலை, அமரத்துவமடைந்த எங்கள் முன்னைய தலைவர் திரு. பொன். சின்னத்துரை — அதி விசேட அதிபர் அவர்களுக்குக் காணிக்கையாக்குகின்றோம். அவர் எங்கள் மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகளிருந்து பாடுபட்டதற்கு நாம் செய்யும் நன்றிக் கடன் இதுவாகும். அவரது தலைமைத்துவக் காலம் எங்கள் சங்கத்தின் பொற்காலமெனலாம்.

இந்த நல்ல நூலை வெளியிடுவதற்கு நாம் எண்ணங் கொண்டிருந்த வேளையில் எமக்கு உதவ முன்வந்தார் அமரர் பொன். சின்னத்துரை அவர்களின் மகன் திரு. சின்னத்துரை சாந்திக்குமார் அவர்கள். எமக்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளைத் தந்த திரு. சி. சாந்திக்குமார் அவர்கட்கு எமது நன்றியை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மட்டக்களப்பிலேயே சிறந்த சைவத் தொண்டரும், நூலாசிரியரும், அறிவாளியுமான தேசிகமணி கா. அருணாசல தேசிகர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு அவர்களின் பணியினாலே வளர்க்கப்பட்ட எமது சங்கம் அவர்களின் உதவிகொண்டு வித்துவான் F. X. C நடராசா அவர்களால் மதுரையில் பிரசுரம் செய்த "எண்ணெய்ச் சிந்து" என்னும் இந்நூலை மறு பிரசுரம் செய்து வெளிக் கொணர்வதில் எமது சங்கம் மகிழ்ச்சியடைகிறது.

பொதுமக்கள் இந்நூலை வாசித்தும், பிள்ளைகள் மத்தியில் நடமாடச் செய்தும் நலமடைய வேண்டுகின்றேன்.

4/1, சூரிய ஒழுங்கை,
மட்டக்களப்பு.
14-01-1983.

வி. த. குமாரசாமி.
செயலாளர்,
மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கம், என்னால் முதன் முதலாகப் பதிப்பிக்கப் பெற்ற ஏண்ணெய்ச் சிந்து என்ற நூலினை மறுபிரசுரஞ் செய்ய முன்வந்தமையையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலினை முதலிற் பதிப்பிக்கக் காரண கருத்தவாக இருந்தவர் தேசிகமணி சு.ஈ. அருணாசலம் அவர்களே. தேசிகமணியவர்கள் ஓலைச் சுவடிகளைத் தந்து உதவியதுமன்றி விரிவான முன்னுரையும் எழுதி உதவினார்கள்.

இந்த எண்ணெய்ச் சிந்து மட்டக்களப்பு நாட்டின் பாரம்பரியச் சம்பிரதாயங்களை எடுத்துரைக்கும் சிறந்த நூலாக மிளிர்கின்றது.

இந்நூல் புலவர் ஒருவராற் பாடப்பட்ட தன்று. பலரும் பல விதமாகப் பாடிய பாடல்களின் தொகுப்பாகும்: இதனைச் சுருக்கிப் பாடுவாருமுளர். எனினும் பொருளில் மாற்றமில்லை.

ஆகவே, இதனை நாட்டுப்பாடல் என்ற வகையில் அடக்கலாம். நாட்டுப் பாடலும் நாட்டுப்புறக் கலைகளில் ஒன்று.

நாட்டுப்புறக் கலைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட்டுவரும் இக்காலத்தில் மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கம் இந்நூலின் மறுபதிப்பை வெளிப்படுத்த முயற்சி எடுத்தமை போற்றுதற்குரியதே.

பாடசாலைச்சிறாரும் மற்றும் பழைமை விரும்பும் பேரறிஞர்களும் தங்கள் பாரம்பரியப் பண்பாடுகளை அறிந்து அவை அழிந்து போகாமற் பாதுகாக்க இந்நூல் பெரிதும் சாதகமாக இருக்குமென்பதிற் சந்தேகமின்று.

பண்டைய பழக்க வழக்கங்கள், சொற்பிரயோகங்கள், ஆசிரியர்களுக்கும் மாணாக்கருக்குமுள்ள தொடர்புகள், பிள்ளைகளின் பிறப்பு வளர்ப்பு என்றின்னோரன்ன விடயங்களும் நூலிற்காணப் படுகின்றன.

சமய விருத்தியும் கலாசார விருத்தியும் இணைபிரியாதவை. இதற்காக உழைத்துவரும் இந்து சமய விருத்திச் சங்கத்தாரின் பணிமேன்மையடைவதாக. தமிழ் பேசும் மக்கள் இவர்களை ஆதரித்து நூலினைப் பெற்றுப் பூரிப்பார்களாக.

53, மத்திய வீதி,
மட்டக்களப்பு,
10-01-83

வித்துவான் F. X. C. நடராசா

உ

# அணிந்துரை

கடவுள் பக்தியும் குரு பக்தியும் குறைந்து, பெற்றோரையும் பெரியோரையும் மதித்து நடக்கும் பண்பு அருகிவரும் இந்தக் கால கட்டத்தில் என்னெஞ்சிந்து என்னும் இந்நூல் வெளியிடப்படுவது மனதுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. காலத்தை அறிந்து, தேவையையுணர்ந்து இந்நூற் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்ப எண்ணங் கொண்ட மட்டக்களப்பு இந்துசமய விருத்திச் சங்கத்தினரின் நல்ல முயற்சியைப் பாராட்டுகிறேன். வெள்ளிவிழாக் காணவிருக்கும் இச் சங்கம் மேற்கொண்ட நல்லதொரு பண்பாட்டுப் பரப்பல் முயற்சியில் இதுவும் ஒன்றாக அமைந்துள்ளது.

> உற்றகலை ஓதுவிக்கும் உபாத்தியாயர் தன்கூலி
> இத்தனை கூலிகளை இல்லையென்றால் மாதாவே
> மெத்த நரகமதில் வீழ்ந்திடுவார் மாதாவே

என்றுள்ள என்னெஞ்சிந்துப் பாடல் வரிகள், தமிழர் தம்முடைய பாரம்பரியத்தைக் கைவிடாது பின்பற்றவேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைந்திருப்பதைக் காணலாம்.

நவீன காலப்போக்கில் மயங்கிக் கிடக்கும் மக்களுக்கு நம் முன்னோர் வாழ்வை எடுத்துக்காட்டி, அவ்வழியில் அவர்களைத் திசை திருப்பிவிடும் ஒரு வழிகாட்டியாகத் திகழப்போகும் இந்நூலைப் படித்தவரெவரும்; உயர் குணங்களையும், தானதரும சிந்தையையும், மாதா பிதா குரு தெய்வம் ஆகியவற்றில் பக்தியையும் பெற்றேயாவர். இதை சாதி மத பால் வயது வேறுபாடு இல்லாமல் அனைவரும் பணம் கொடுத்து வாங்கிப் படித்துப் பயன்பெறவேண்டும்.

எத்தனையோ நல்ல பல கருமங்களைக் கடந்த இருபத்துநான்கு ஆண்டுகளாகச் செய்துவரும் இந்த மட்டக்களப்பு இந்துசமய விருத்திச் சங்கம் மேலும் இதுபோன்ற பணிகளைத் தொடரவேண்டுமென்று வாழ்த்தி, இராமகிருஷ்ண பரமஹம்சதேவரின் அருள் கிட்ட வேண்டுகின்றேன்.

இராம கிருஷ்ண மிஷன்,
கல்லடி — உப்போடை,
மட்டக்களப்பு.
01-01-1983.

சுவாமி ஜீவனானந்த.

# எண்ணெய்ச் சிந்து

## காப்பு

ஆனை முகனே யரனார் திருமகனே
கானமதம் பாயுமொரு கையோனே — ஞானமுற
வித்தைகற்கும் பிள்ளைகட்கு விக்கினங்கள் வாராமல்
நித்தநித்தம் நீதுணையாய் நில். 1

பூமாது நாளும் புகழுமெண்ணெய்ச் சிந்துதனைப்
பாமாது தன்னருளாற் பாடவே — யாமோது
செம்பொற் கதிரைநகர்ச் செல்வனுக்கு முன்பிறந்த
கம்பக் கரிமுகத்தோன் காப்பு. 2

செந்திருவைச் சேரலாஞ் செந்தமிழைப் பாடலாம்
இந்திரனைப் போல்வாழ்ந் திருக்கலாம் — சுந்தரஞ்சேர்
வெற்பகத்தை யூடறுத்த வேலவர்க்கு முனபிறந்த
கற்பகத்தைக் கைதொழுதக் கால். 3

## துதி : கணபதி

சீரார் சனியெண்ணெய்ச் சிந்துதனை யான்பாடக்
காரானை மேனிக் கணபதியே முன்னடவாய்
அந்தி மதிசூடும் அரனார் திருமகனே
கந்தருக்கு முன்பிறந்த கணபதியே காப்பமே.

## சிவன்

முன்னாளி லாகமத்தில் மூதுணர்ந்தோர் சொன்னபடி
இந்நாளி லெண்ணெய்ச் சிந்துதனை யான்பாட
வண்ணத் தமிழ்ப்புலவர் வரைந்து குற்றம் பேசாமல்
பெண்ணை யிடம்வைத்த பிஞ்ஞகனார் தாள்துணையே.

## பரமேசுவரி

சோதி யெண்ணெய்ச் சிந்துதனைத் தொல்புவியில் யான்பாட
ஆதிபர மேசுவரி யம்மையிருதாள் துணையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமணியர்

எத்தி யெருதேறும் ஈசனுர் தாம்பயந்த
அத்திக் கிளைய அறுமுகவன் தாள்துணையே
பற்றி யசுரர் தம்மைப் பணிவாக வேரறுத்து
வெற்றி மயிலேறும் வேலவனுர் தாள்துணையே.

## சரகுவதி

சால நமஸ்கரித்தேன் சரசுவதியே யுந்தனையும்
வால சரசுவதியே வந்துகவி செய்யுமம்மா
பால சரசுவதியே நாவதனில் வந்திரம்மா
ஞால சரசுவதியே வாக்கருள வேணுமம்மா
வாணி சரசுவதியே வரமருள்வாய் என்தாயே
பேணி யுனைநடப்பேன் பெற்றவளே காருமம்மா
நாவு தவருமல் நல்லவரந் தந்தருள்வாய்
பாவிலே நீயிருந்து பண்பாய் நடத்துமம்மா.

## நூல்

ஏடு தவருமல் எழுத்தாணி சாயாமல்
கோடு தவருமல் குற்றமொன்றும் வாராமல்
அத்தி முகத்தோனே அரனுர் திருமகனே
சத்திக் கணபதியே சண்முகனே காத்திடுவீர்
எண்ணெய்ச் சிந்துதனை எளியேனுரைத் திடவே
அன்னையரே தந்தையரே ஆதரவாய்க் கேட்டிடுவீர்
வண்ணத் தமிழ்ப்புலவர் வரைந்துகுற்றம் பேசாமல்
இந்நாளில் சிறியேன் எண்ணெய்த் தமிழ்பாடல்
பாட வறியேன் பயனறியேன் பாருலகில்
நாடி யுரைக்கலுற்றேன் நல்லகவி வாணர் முன்பு
இந்த எண்ணெய்ச்சிந்தை எல்லோரும் கேட்டிருந்தால்
கன்ம வினையகன்று காசினியில் வாழ்ந்திடுவார்
தன்ம மிகப்பெருகும் சந்ததிக ளீடேறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னனைய மாதாவே போதவே கேட்டிடுவீர்
அன்னையொடு தந்தை யரிய பிறவிகளே
பெற்ற வரலாற்றைப் பெருமையுடன் பேசுகிறோம்
சற்று மனதிரங்கித் தயவாக நீர்கேளும்
முன்னாளிலே பயனும் முக்கணனு முளமகிழ்ந்து
இன்னாளிலே சென்ம மீட்டற வேணுமென்று
பூமிதனை வகுத்துப் பிறப்பித்தார் சிவசெந்து
ஆமிது மெய்யென் றறிந்து நீர்மாதாவே
இந்தப் பிரகாரம் இருக்குமந்த நாளையிலே
மைந்த ரில்லையென்று மனதுமிகச் சோர்வடைந்து
எத்தனை செல்வ மிருந்தாலு மிப்புவியில்
புத்திரச் செல்வம் புவிமீதில் வேணுமென்று
எந்தை பரமேசுவரி யிரக்கம் புரிந்தருளத்
தந்தையரும், நீரும் தயவுகொண்ட நாளையிலே
மைந்தர்பெற வேண்டுமென்று விரும்பித் தபசுபண்ணி
அந்தமுட னெங்களுக்காய் அரிய தபசுபண்ணிச்
சிந்தை மகிழ்ந்துபெற்ற செய்திகளைச் சொல்லுகிறோம்
நன்மையுள்ள மாதாவே நாடிநீர் கேளுமெல்லாம்
தன்மையுட னெங்களைநீர் தயவாய்ப் பெறவேண்டி
ஆராயும் வேதமுட னைந்தெழுத்தை யும்நினைத்து
நேராத கோயிலெல்லாம் நேர்ந்து தபசுபண்ணிக்
கும்பிடாக் கோயிலெல்லாம் கும்பிட்டுத் தெண்டனிட்டு
தம்பிடாக் கோயிலெல்லாம் நயந்துமே செப்பனிட்டு
அன்னம் வழங்கி யரிய தபசுபண்ணிப்
பொன்னுடனே வஸ்திரமும் போதவே தானளித்துச்
சோகம் பெரிதாய்த் துயரடைந்தி ராதலினற்
றுகமுட னெங்கள் தம்பிரான் கண்டருளிச்
சித்த மிரங்கிச் சிவனு முமையாளும்
மெத்த மகிழ்ந்து விடையோ னுமக்கருளக்
கும்பியினில் வந்துதித்த கொள்கைகேள் மாதாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புவியின் மீதெழுந்த அறுகுநுனிப் பனிபோலச்
சிறந்தைந்தாம் நாளில் சிறுபுன்னைப் பூப்போல
நிறைந்தபதி னைந்தாம்நாள் நீர்க்குமிழி போலாகி
ஐயாறு முப்பதுநாள் அடைவுடனே சென்றபின்பு
பொய்யாமற் கோழிமுட்டை போற்றலையு முண்டாகித்
திங்கள் அணிந்த சிவனார் கிருபையினால்
உங்கள் வயிற்றில் உற்பவித்தோம் மாதாவே
உற்பவித்த நாள்முதலாய் உங்கள் வருத்தமது
கெற்பச் சுழற்சி கிறுகிறுப்பு முண்டாகிப்
பித்தமது கக்கிப் பெரிய துயரடைந்து
சத்தி யருவருப்புத் தாங்க முடியாமல்
புத்தி மயங்கிப் புடவிதனில் வீழ்ந்து
நித்திரை கலைந்து நினைவு தடுமாறி
வெற்றிலை பாக்கு விரும்பி யருந்தாமல்
பற்றிலையோ வென்று பரனேயென வழுதீர்
சோறு மறந்தீர் சுகிர்தம் பலமறந்தீர்
வேறு வினைகளின்றி மெத்த மனஞ்சலித்தீர்
திங்கள் நுதலாளே செப்பரிய மாதாவே
சங்கரன் தன்னருளாற் தாரணியோர் தாமறிய
மற்ற மாதத்தில் மாதவிடாய் வாராமல்
சுற்றமுடன் நீங்கள் சூழ்ந்திருக்கு மந்நாளில்
ஆலிலை போலே யமர்ந்த வயிறதுவும்
சாலமுட னோங்கித் தளிர்த்து வளர்ச்சியதாய்
ஆக வொருமாதம் அனைவோரு மக்கறியப்
போகமுடன் நீங்கள் புகழ்ந்திருக்கு மந்நாளில்
மாத மிரண்டு வளமாய் நிரம்பியபின்
வேதனைகளாகி மெத்த வருத்த முற்றீர்
மூன்று மாசத்தில் முறைமையுள்ள மாதாவே
தோன்றுஞ் சுடர்காய்ந்து சொகுசாய்ப் புளியருந்தி
நாலு மாசத்தில் நஞ்சுண்ட கெண்டையைப்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுஞ் சுரக்கப் பகற்பொழுது தூக்கமதாய்
அஞ்சு மாசத்தில் அரைவயிறு பிள்ளையதாய்
விஞ்சு முலைகறுத்து விம்மியே பால்சுரக்க
ஆறு மாசத்தில் அருமையுள்ள மாதாவே
கூறு பிணிகள் கொண்டே மயக்கமுற்றீர்
ஏழு மாசத்தில் எங்களுடை மாதாவே
தோளுட் இடப்புறமும் தொப்பூளுந் தான்வீங்கி
எட்டு மாசத்தில் எடுத்தடி வைக்கொணாமற்
திட்டிதனிலிடறிச் சிவனேயென வழுதும்
ஒன்பதாந் திங்களில் மேலுவமையில் மாதாவே
துன்ப மிகவாகித் தூங்கி யெழுந்துநின்றும்
வாசற் படிகடக்க மாட்டாமனி ரிருந்தும்
பேசப் பெலன்குறைந்து பெரிய துயரமுற்று
வாயு மிகுத்தே வயிறுநோ வுண்டாகித்
தூய வுடம்புதனிற் றுயரடைந்தீ ராதலினல்
எண்ணெய் குளிகை இதமான சூரணமும்
வெண்ணெயொடு நீங்கள் பரிகாரஞ் செய்தபின்பு
பத்து மாதத்திற் பரிவுடைய மாதாவே
மெத்த வயிறுநொந்து மெய்யு நடுக்கமுற்றீர்
நாதன் அருளாலே நல்லதிரு நாளதனில்
வேதன் அருளாலே மேன்மேலும் நோக்காடாய்க்
கூடும் புவியுதிக்கக் குறிகண்டு நோகுதென்று
ஓடி மருத்துவத்தை யொருநொடியிற் றழைத்துக்
கூடி வருகையிலே கூவென்று தானழுதீர்
தாயும் தமரும் சகோதரியுந் தற்சூழ
ஆயும் மருத்துவிச்சி யஞ்சாதே யென்றுரைக்க
காலுக்கு நிற்பாரும் கைதாங்கி நிற்பாரும்
மேலுக்கு நிற்பாரும் வேதனையோ வென்பாரும்
தேவதைக்கு நேர்வாரும் தெய்வமே யென்பாரும்
நோவதைக்கு தென்று நுவன்று சலிப்பாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரங்க ளாலே வலாற்காரஞ் செய்வாரும்
தந்திரங்க ளாலே தளர்வாற்றி நிற்பாரும்
இந்தப் படியாக இவர்களெல்லாம் நிற்கையிலே
அந்தப் பேர்மாயன் மழுவினுற் றன்ளிவிடப்
பன்னீர்க் குடமுடைந்து பாலன் பிறந்திடவே
நன்னீர்மை கொண்டு நயந்துநயந் தெல்லோரும்
பெண்பிள்ளை யல்லவிது பேருலகில் எங்களுக்கு
ஆண்பிள்ளை யென்றே யகமகிழ்ந்து *கூரைதட்டி
வாயார வாழ்த்தி வரிசையுடன் *கோலெறிந்து
தாயார் மருத்துநங்கை தவிடுகொண்டு தளன்புரட்டி
மஞ்சன நீராட்டி மணிமூக்குத் தான்பிடித்து
அஞ்சனந் தீட்டி அலங்காரப் பொட்டுமிட்டுச்
சடுதியுட னெடுத்துத் தாயார் மடியில்வைத்து
உடுபுடவை தன்னாலே உள்ளீரந் தான்துடைத்துக்
காட்டில் மருந்துங் கடைச்சரக்கும் தானெடுத்து
ஊட்டிநோய் தீர உவப்பாக வேபருக்கி
எங்கெங்கு மோடி இரக்கமுடன் பால்வாங்கிச்
சங்குதனில் வார்த்துத் தயவாய்ப் பருக்கியதும்
கண்ணூறு நாவூறு அத்தனையும் வாராமல்
வெண்ணீறு கொண்டு மெய்யில் மிகப்பூசி
வேப்பிலையி னாலே மிகுபுகையுந் தான்காட்டிக்
காப்பணிந்தே அஞ்சாங் கணக்கில் மருங்கைசெய்து
பன்னிருநாட் சென்றே பலபேருந் தான்கூடி
இன்னிதமா யெங்களுக் கேற்றமருங்கை செய்து
சாணை யுதறித் தயவாய் மடியில்வைத்துப்
பேணி வளர்த்திரே பிரியமுள்ள மாதாவே
முப்பதுநா ளெண்ணி முடிந்தமறு நாளையிலே

---

* கூரை தட்டுதல்: யாழ்ப்பாணத்திலுள்ள வழக்கு.
கோலெறிதல்: கூரைக்கு மேலால் உலக்கையை எறிதல்,
மட்டக்களப்பு வழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பமுடனெங்கள் சிரசின்மயிர் களைந்தும்
வெற்றிலை பாக்கும் மிகவருந்தல் தான்மறந்தும்
நித்திரையு மற்றே நினைவுந் தடுமாறி
ஓராட்டிச் சீராட்டி யுள்ளம் மிகமகிழ்ந்து
தாராட்டுஞ் சொன்னீரே தயாபரரே எங்களுக்கு
அங்கையி லேந்தி யணைத்து மடியில்வைத்து
மங்காமல் முத்தமிட்டு மகனே யெனப்புகழ்ந்து
மெச்சி மடியில்வைத்து மேன்மேலும் முத்தமிட்டு
உச்சியுல ராமல் உகந்துநீ ரெண்ணெய்தப்பிக்
கட்டெறும்பு சிற்றெறும்பு கடியதேள் மூட்டையிவை
திட்டமுட னென்றும் தீண்டா தெமைவளர்த்தே
குடிவிளங்க வந்த குமாரனென்னத் தாம்மகிழ்ந்து
விடிவிளக்கும் வைத்தீரே விளங்கிரண்டு மாதமதாய்
உடும்பு பிடிக்குதென்று உகந்துகந்து கொண்டாடிக்
குப்புற வீழ்ந்து குலாவித் தவழ்ந்துவந்து
செப்பமா யுன்மடியிற் சேருகின்ற வேளையிலே
ஏந்தியே தானெடுத்து என்மகனே யென்றுசொல்லி
பெற்றெடுத்த வுங்கள்மனம் பெருகத் தனிமகிழ்ந்து
அன்னமு மூட்டி அரைவய தானபின்பு
தன்னை யறிந்து தவழ்ந்து விளையாடிச்
சப்பாணி கொட்டுவித்துச் சாஞ்சாடத் தான்பயிற்றி
வைப்பாக நாங்கள் வளர்கின்ற நாளையிலே
தத்தடி வைத்துத் தடக்கி நடந்தோடி
மெத்த விரும்பி விளையாடு மந்நாளில்
ஆண்டொன்று சென்று அடியூன்றிக் கால்மிதித்துத்
தூண்டி நடைபயிற்றிச் சொற்பழக்கி எங்களையும்
சிற்றுடை சாத்திச் சிறுசதங்கை தானணிந்து
முத்தாரம் பூட்டி முழுவயிரத் தண்டையிட்டுக்
காறை யணிந்து கைக்கு வெள்ளிக் காப்புமிட்டு
வேறு சிறுவருடன் விளையாட்டுப் பார்த்திருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதலை மொழிகேட்டு வாவென்று தானழைத்துக்
குதலை மொழிகேட்டுக் கோலமது கண்டிருந்து
கண்ணூறு நாவூறு *காற்றணவு வாராமல்
வெண்ணீற் றிடுலே வினைதீர்த்தாய் மாதாவே
ஐஞ்சுவய தானமட்டும் அன்னையரே எங்களைநீர்
கொஞ்சி வளர்த்திரே குறைவொன்றும் வாராமல்
கற்றோர் பெரியோர் கலையறிந்த மாமறையோர்
உற்றாரும் மற்றோரும் உறவுமுறை யானவரும்
எல்லாருங் கூடி யெங்களை மூடரென்று
சொல்லாமல் நீங்கள் கலைபயிற்றவே நினைந்து
பள்ளிக்கு வைக்கும் பருவமிது வென்றறிந்து
பிள்ளைக்குக் கல்வி பிரிய முடன்பயிற்ற
உள்ள மகிழ்ந்து உவப்பாய் மனமகிழ்ந்து
வெள்ளிக் கிழமையிலே வேளையுள்ள நாழிகையில்
இன்பமதான இரேவதி நட்சத்திரத்தில்
ஒன்பது கோளும் உறவுசெய்யும் வேளையிலே
தெள்ளுதமி ழறிந்த தேசிகரைத் தானழைத்து
உள்ள முறையாக உபாத்தியாய ரைத்தொழுது
எங்கள் பிள்ளைதனை இணக்கமுடன் நீருகந்து
பங்கமில்லாக் கல்வி படிப்பிக்க வேணுமையா
நல்லதென் றுபாத்தியாயர் நயப்புடனே எங்களுக்குத்
தொல்லையில் லாக்கல்வி தோன்றுவிக்க வேணுமென்று
பட்டைப் புனைந்து பரிவாய் அலங்கரித்து
சட்டையு மிட்டுத் தலைப்பாவுந் தானணிந்து
செம்பொன் னரைஞாண் சிறப்பாய் இடுப்பிலிட்டு
அம்பொன் மயிர் கேசம் அழகாய் முடித்தபின்பு
பத்தி யுடனே பரிவாய்த் தரைமெழுகி
சித்திக் கணபதியைச் சரசுபதியையும் நிறுத்தி

* காற்றணவு எனபது பேய் பசாசு பார்வையுறுதலைக் குறிப்பதற்கு வழங்கும் மட்டக்களப்பு வழக்கு.

பிள்ளையார் செய்து பெரியவிளக் கேற்றிவைத்து
வெள்ளித் தயிலாவில் வெற்றிலையும் பொற்பணமும்
அள்ளிக் குவியல்செய்து அன்பாயரி செடுத்து
பிள்ளையார்க் கென்றே பெருத்த நிறைகுடமும்
வெற்றிலையும் பாக்கும் விரும்பிய பூங்கரும்பும்
தெள்ளிய மோதகமும் சீனிகண்டு சர்க்கரையும்
வாழைப் பழமும் மாங்கனியுந் தீஞ்சுளையும்
வேழ முகத்து விநாயகர்க்கு முன்குவித்து
ஐங்கரற்குப் பூசை யன்பாய் முடித்தபின்பு
அரிச்சுவடி தானெழுதி யரிநமோ வென்றுரைத்து
ஓதினார் பாடம் உபாத்தியாய ரெங்களுக்கு
நீதி முறையாய் நிலவெழுத்துந் தான்பழக்கி
அரிவரி யிலக்கம் ஆனவெழுத் தத்தனையும்
பரிவாக நாங்கள் பயின்றுவரு மந்நாளில்
சாயும் பொழுது தரையிலே பேரெழுதி
நேய முடனே நிதமும் மனமகிழ்ந்து
வாயிற் கணக்கும் வகையான பெயர்க்கணக்கும்
தேசக் கணக்கும் சிறப்பான நாட்கணக்கும்
எண்ணற் கணக்கும் எழுத்துப் பிரிவுகளும்
உண்மைப் படியே உபாத்தியாய ரெங்களுக்கு
ஆத்திசூடி கொன்றைவேந்தன் அன்பான மூதுரையும்
நேத்தியாய் நன்னெறியும் நல்வழியும் நாம்படித்தோம்
உரிச்சொல் திவாகரமும் உண்டான நன்னிகண்டும்
மாடேறு மீசுரனார் மாலைகளுந் தான்படித்தோம
அன்றுதொடுத் தின்றளவும் அன்பாகவெங்களையவர்
நேசித் திருந்தே நிதமுமது தொழிலாய்
உள்ளபடி யெல்லாம் உவந்துதந்தார் மாதாவே
பாடாயிரம் பட்டார் பார்க்கவொண்ணு மாதாவே
எங்களுக் காக இப்பாடு பட்டதினால்
திட்டமுடன் ஐயர்மனந் தேற்ற வேணுமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன புதுவருடம் அடுத்த விடுதலேக்கு
மானமுள்ள தேசிகர்க்கு வருங்கூலி வாங்கவந்தோம்
அரிசியணைஞ் சீலே அடைவுடனே நான்வாங்க
பரிசினுடன் நீர்வாழும் பதிக்குவந்தோம் மாதாவே
வாசித்துத் தந்தகடன் வைத்திருத்த லாகாதே
ஓதுவித்தகாசில் ஒருகாசு சிக்கிநின்றால்
பாதிவித்தை தானும் பலியாது மாதாவே
ஏட்டுச் செலவுதன்னே இல்லேயென்ற பிள்ளேகள்தான்
மோட்டுத் தனப்படுவார் முறைறமையிது மாதாவே
மாதப் பணமும் வயிற்றுப் படியரிசும்
போதக் கொடுத்தாற் புகழுண்டு மாதாவே
ஆன சனிக்கிழமை யரிசியெண்ணெய் தண்டவந்தோம்
சனியெண்ணெய்க் கென்றுவந்தோம் தாயே சலியாதே
இனியெண்ணெய் இல்லேயென் றேதும் உரையாதே
வருத்திப் படிப்பித்த வாத்தியார் தன்கூலி
பொருத்த முடனளித்தாற் புண்ணியமுண் டுங்களுக்கு
செல்வப் பொருள்தான் சிலவேளே யழிந்துவிடும்
கல்விக் கிணங்கியதோர் கைப்பொருளு மில்லேயம்மா
செல்வக் குமாரரெல்லாஞ் சேரவே வந்துநிற்க
முத்துக் குமாரரெல்லாம் முத்தத்தே வந்துநிற்க
பவளக் குமாரரெல்லாம் பந்தரின்கீழ் வந்துநிற்க
அருமைக் குமாரரெல்லாம் அருகிலே வந்துநிற்க
பார்த்து மிருக்கிறீரோ பாலகனர் தஞ்சிறப்பை
உச்சி துடிக்குதம்மா உள்ளங்கால் வேகுதம்மா
பிச்சிகளோ நீங்கள் பின்னிரக்க மில்லேயம்மா
கால்கை கடுக்குதம்மா கமலமுகம் வாடுதம்மா
மேல்கள் வலிக்குதம்மா வெயிலில் உருகுதம்மா
மேனி நடுங்குதம்மா வெகுசோக மாகுதம்மா
வேர்த்துச் சொரியுதம்மா வெந்நீர் குளித்தாற்போல்
பார்த்து நிற்கலாமோ பாலர் படுந்துயரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர்விடா வாகுதம்மா தாகமிகத் தோணுதம்மா
கண்ணீர் சொரியுதம்மா கரங்கள் கடுக்குதம்மா
வயிறு பசிக்குதம்மா வாயாவி கொள்ளுதம்மா
தயிரு மிளநீருந் தாருமம்மா தாயாரே
ஈனு மலடிகளோ இரக்கமில்லாப் பாவிகளோ
தானு யிரங்காமற் தாட்சணிய மற்றீரோ
மாணிக்கம் முத்து வைரம்வை டூரியம்
காணிக்கை யிட்டுக் கதிரவனைப் போற்றிசெய்து
பேணி வளர்த்துப் பேறுபெற வேணுமென்று
வாணியங்கள் செய்து மருங்கு குறையாமல்
கூலிக்குச் செய்யாமல் கொள்ளையிட்டுத் தின்னுமல்
வேலிக்கு முள்ளுவெட்டி வீணுய்ப் போகாமல்
கள்ளனுய்ப் போகாமல் காவாலி யாகாமல்
சுள்ளி விறகெடுத்துச் சுமைதலைமேல் வையாமல்
பள்ளிக் கொளித்துப் பரதேசம் போகாமல்
உள்ள பொருளழிக்க உகந்து குடியாமல்
ஆடுகள் மேய்த்து அலைந்து திரியாமல்
மாடுகள் மேய்த்து மடையனுய்ப் போகாமல்
கப்பலி லேறிக் கலாசுபற்றி யுண்ணுமல்
இப்புவியில் எங்களை யேனையோ ரேசாமல்
சூது விளையாடிச் சுகமிழந்து போகாமல்
மாதர்பின்னே சென்று மயங்கித் திரியாமல்
ஓடு தனையெடுத்து யாசகியாய்ப் போகாமல்
கூடுஞ் சபையைக் குலைக்க நினையாமல்
வெய்யிலிலே நின்று வெகுவேலை செய்யாமல்
பொய்க ளுரையாமற் பெரியோரை யேசாமல்
வம்பனென்று கேளாமல் வகைமோசஞ் செய்யாமல்
நம்பின பேருக்கு நான்துரோகஞ் செய்யாமல்
அண்டின பேரை யடுத்துக் கெடுக்காமல்
என்றுஞ் சபைதனிலே யேமாந்து நில்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா திரிந்து சுணங்கனுய்ப் போகாமல்
இம்மாத் திரமு மில்லாமல் எங்களைநீர்
பள்ளிக்கு வைத்துப் பலகலைக ளோதுவிக்க
அள்ளிக் கொடுத்தோ அநேகஞ் செலவழித்தீர்
ஆகையால் நாங்கள் அறிவுநூல் கற்றதனுல்
பாகனைய தாயாரே பரிவுடைய மாதாவே
ஈனமிகப் பேசாமல் எங்களுடை மாதாவே
பச்சரிசி தேங்காய் பணமோடு வெள்ளிலையும்
இச்சையுடன் நீங்கள் இதமாய் மனமகிழ்ந்து
இஞ்சி மிளகுடனே ஈருள்ளி வெங்காயம்
மஞ்சளிரு சீரகமும் மணக்கும் பெருங்காயம்
பாகற்காய் தேங்காய் பயத்தங்காய் கத்தரிக்காய்
ஆக விவைமுதலாய் அன்பான பூசணிக்காய்
உப்பு மிளகாயும் ஊறுகாய் தன்னுடனே
குப்பியில் எண்ணெய் கொடுவந்து வார்த்துவிடீர்
வேட்டி சவுக்கம் விதமான வத்திரங்கள்
நாட்டமுடன் ஈந்தால் நயமுண்டு மாதாவே
நாடி நடந்து நலிந்து துயரமுற்று
வாடி மிகநொந்து வருந்துகிறோம் மாதாவே
பாலர் படுந்துயரம் பார்க்கிலையோ மாதாவே
வால இளங்குமரர் வருந்துகிறோம் ஆச்சியரே
பாடம் படித்துப் பழம்பாட மொப்புவிக்க
ஓடிவரச் சொன்னூர் உபாத்தியாயருக் கென்ன சொல்வோம்
பொன்னும் பொருளும் மிகுப்போ தலைந்துவிடும்
அன்னையரே கல்வி யழியா தொருநாளும்
கல்விக் கிணையாகக் கனதேட்ட மில்லையம்மா
செல்வமென்னுங் கல்வி மிகச்சேரத் தாருமம்மா
வீட்டிலெண்ணெ யில்லாட்டால் விடுகாசு மில்லாட்டால்
கேட்டுக் கடன்வாங்கிக் கிருபையுடன் தாருமம்மா
வந்தும் வெகுநேரம் வருந்தா தனுப்புமம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள்குரு வாரவர்தா னிந்நேரம் பார்த்திருந்து
வெங்கண் சிவந்து வெகுகோபம் கொண்டிருப்பார்
இன்னுஞ் சற்றுநேரம் இவ்விடத்தில் நின்றுவிட்டால்
பழம் பாடம் சொல்கிறதும் பாங்காய் எழுதிறதும்
அன்னையரே கல்வி யடைவுடனே சொல்கிறதும்
தவறில் எங்களுக்குத் தான்செய்யும் ஆக்கினைகேள்
காதிற் பிடித்துக் கடுகெனவே கிள்ளிடுவார்
மோதிப் பிடித்து முதுகின்மேல் போட்டிடுவார்
கொட்டான் பிரம்பாலே கூப்பிட் டடித்திடுவார்
நெடிய பிரம்பாலே நீட்டியடித்திடுவார்
கட்டி யுருட்டிக் கடுவெயிலிற் போட்டிடுவார்
கட்டி யடித்துக் கனதண்டஞ் செய்திடுவார்
கூட்டோடு பொல்லாக் கொடிய முசுறுதனைப்
போட்டிடுவா ரெங்கள் பொன்னுன மேனியிலே
பாட்டைப் யடித்துப் பழம்பாடஞ் சொல்லாட்டால்
சாட்டை யெடுத்துச் சடசடென வீசிடுவார்
பாடங் கொடாதிருந்தால் பாராமல் எங்கள்முகம்
வாடாநீ யென்று வலுவாய்ப் பிடித்திழுத்து
நெற்றியிலே கல்லுவைத்து நேர்கதிரோன் முன்பாக
ஒற்றைக்கால் நில்லென்று உறுக்கி யடித்திடுவார்
துரும்பெடுத்து நீங்கள் தொட்டிடா மேனியிலே
அறிவைப் புகட்டுதற்கு ஆக்கினைகள் செய்திடுவார்
பள்ளிக் கொளித்தாற் பதறப் பிடித்துவந்து
கொல்லுவே னென்று கோபித் தடித்திடுவார்
கட்டளை யிட்டபடி கருத்தாய்ச் செய்யாக்கால்
திட்டமுடன் எங்களைச் சினந்துறுக்கி யேயடிப்பார்
நேரமது சென்ருக்கால் நெற்றிதனிற் கல்லேற்றி
வாரிச் சவுக்கெடுத்து வளமாகத் தான்பிடித்து
வீசி யடித்திடுவார் மெய்யுதிரங் கொப்புளிக்க
கூசி நடுங்கிக் கூவென் றழுதிடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றியே யத்துயரம் ஆற்ருது மாதாவே
பன்றிச் சுருக்கிட்டுப் பதைபதைக்கப் போட்டிடுவார்
சிரந்தனிலே எண்ணெயிட்டுச் சீவி முடிதரித்து
சேறணிந்து கையாற் றிருமுகங்கள் சுத்திபண்ணி
நீறணிய வில்லையென்று நிட்டூரம் செய்திடுவார்
நாவழித்துப் பல்விளக்கி நாளும் வராதிருந்தால்
கூவென்று நாங்கள் கூச்சலிடத் தானடிப்பார்
பள்ளியில் நாங்கள் படுந்துயரம் மாதாவே
உள்ளபடி யுரைக்க உள்ளம் கரைந்தழுவீர்
மாதண்டம் பண்ணி மகாகொடுமை செய்திடுவார்
கோதண்டந் தன்னில் கொண்டுபோய்த் தூக்கிடுவார்
ஆதண்டம் என்னுயிரும ஆகாசம் போயிடுமே
ஏதென்று கேட்பவர்யார் எனையீன்ற மாதாவே
அல்லும் பகலும் அனுதினமும் நம்வீட்டில்
பாடம்படியா திருந்தால் பள்ளிக் கொருநாளும்
வரவேண்டா மென்று வசைசொல்வார் மாதாவே
படிக்கும் பொழுது பார்வையிட்டு எங்களையும்
நடுக்க மெடுக்க நயந்தடிப்பார் மாதாவே
கணக்குப் பிழையிருந்தால் கதறவே தானடிப்பார்
முற்றும்பொய் தானுரைத்தால் முதுகிற்ருேல் வாங்கிடுவார்
உபாத்தியாயர் சற்றே மனமிளகி விட்டாலும்
சட்டம்பி யென்னும் சண்டாள மாபாவி
சற்று மிரக்கமின்றி சாடைகள் சொல்லிடுவான்
குற்றங்கள் கூறிக் கொடுமைகள் செய்திடுவான்
வழியில் விளையாடில் வசைமோசஞ் செய்திடுவான்
பழிகள் மிகக்கூறி பங்கங்கள் செய்திடுவான்
தலையிலே குட்டிடுவான் தழும்புபெற நுள்ளிடுவான்
அம்மாவே தாயாரே அரிய பிறவிகளே
சும்மா நாம்நின்று சுணங்குவது நீதமல்ல
மலடி யறிவாளோ மக்கள் அருமைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈதல்லா லுங்களுக்கு இன்னமுஞ் சொல்லுவோம்கேள்
பூதலத்தை நம்பிப் புகழ்ந்து மனமகிழ்ந்து
நீதற்ற செல்வம் சிறப்பாய் மிகப்பெறினும்
காதற்ற ஊசி கடைவழிக்கு மாகாது
வண்ணான் தன்கூலி மருத்துவிச்சி தன்கூலி
அண்ணாவியின் கூலி ஆனபண் டிதன்கூலி
உற்றகலை யோதுவிக்கும் உபாத்தியாயர் தன்கூலி
நற்றிறமாய் வேலைசெய்யும் நாவிதன் தன்கூலி
இத்தனைபேர் கூலிகளை இல்லையென்றால் மாதாவே
மெத்த நரகுதன்னில் வீழ்ந்திடுவார் மாதாவே
ஆகாது நீங்கள் அநியாயம் செய்தாக்கால்
போகாது தோஷம் பூதலத்தில் மாதாவே
ஆகையா லெங்கள் அறிவுடைய மாதாவே
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தார்
பட்டாங்கி லுள்ள பழமொழிகாண் மாதாவே
வெண்ணீறு மைந்தெழுத்தும் வேதா கமமுறையும்
கண்ணீறு மில்லாக் காசினியில் வாழ்ந்திடுவீர்
மாரி பொழிந்து மகிதலமுந் தான்வாழி
ஊரிலுள்ள பெரியோர்கள் உயர்ந்து நிதம்வாழி
அன்னம் பெறுவீ ரரியதவம் பெறுவீர்
சொன்னம் பெறுவீர் சுகங்களெல்லாம் நீர்பெறுவீர்
இன்னம் பெறுவீர் எங்களைப்போல் மைந்தர்களை
எந்தன் குருவாழி ஈன்றெடுத்த தாய்வாழி
தந்தை மிகவாழி சான்றோர் மிகவாழி
எந்தை கிளைவாழி ஈன்றோர் மிகவாழி
பாடினோர் வாழி படித்தோர் மிகவாழி
ஏடு பிடித்து எழுதினோர் தான்வாழி
மாதமும் மாரி மழைபொழிய மானிலத்தில்
ஆல்போற் றழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போற் கூட்டம் முசியாமல் வாழியவே.

**எண்ணெய்ச்சிந்து முற்றிற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநாமாவளி

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## நேரிசை வெண்பா

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலஞ்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே — மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்றாள் சரண்.

**(இராகம்: இந்துஸ்தான் பியாக் ஆதிதாளம்)**

சிவசிவ கஜமுக கணநாதா
சிவகுண வந்தித குணநீதா
சிவசிவ சிவசிவ தத்துவ போதா
சிவகுருபர சிவசண் முகநாதா
சிவசிவ சிவசிவ சின்மய தேஜா
சிவசுந்தர குஞ்சித நடராஜா.

அம்பலத் தரசே யருமருந்தே
ஆனந்தத் தேனே யருள்விருந்தே
பொதுநடத் தரசே புண்ணியனே
புலவரெ லாம்புகழ் கண்ணியனே
மலைதரு மகளே மடமயிலே
மதிமுக வமுதே யிளங்குயிலே
ஆனந்தக் கொடியே யிளம்பிடியே
அற்புதத் தேனே மலைமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசிவ சிவசிவ சின்மய தேஜா
சிவசுந் தரகுஞ் சிதநட ராஜா
படனவி வேக பரம்பர வேதா
நடனசபேச சிதம்பர நாதா
அரிபிர மாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா
அந்தண வங்கண வம்பர போகா
அம்பல நம்பர அம்பிகை பாதா
அம்பர விம்ப சிதம்பர நாதா
அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா
தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா
கனக சிதம்பர கங்கர புரஹர
அனக பரம்பர சங்கர ஹரஹர
சகலக லாண்ட சராசர காரண
சகுண நி வாண்ட பராபரி பூரண
இக்கரை கடந்திடில் அக்கரையே
இருப்பது சிதம்பரச் சர்க்கரையே
என்னுயி ருடம்பொடு சித்தயதே
இனிப்பது நடராஜ புத்தமுதே
ஐயா திருச்சபை யாடகமே
ஆடுத லானந்த நாடகமே
உத்தர ஞான சிதம்பரமே
சித்திபெ லாந்தரு மம்பரமே
அம்பல வாசிவ மாதேவா
வம்பல வாவிங்கு வாவாவா
நடராஜ னெல்லார்க்கு நல்லவனே
நல்ல சிவ லாஞ்செய வல்லவனே
ஆனந்த நாடகங் கண்டோமே பர
மானந்த போகங் கொண்டோமே

சகலவு பகள நிட்கள நாதா
உகள சததள மங்கள பாதா
சந்தது முஞ்சிவ சங்கர பஜனம்
சங்கித மென்பது சத்சன வசனம்
சங்கர சிவசிவ மாதேவா
வெங்கனை யாட்கொள வரவாவா
அரகர சிவசிவ மாதேவா
அருளமு தந்தர வாவாவா
நடன சிகாமணி நவமணியே
திடனக மாமணி சிவமணியே
நடமிடு மம்பல நன்மணியே
புடமிடு செம்பலப் பொன்மணியே
உவட்டாது சித்திக்கு முள்ளமுதே
தெவிட்டாது தித்திக்குந் தெள்ளமுதே
நடராஜ வள்ளலை நாடுதலே
நந்தொழி லாம்வினை யாடுதலே
அருட்பொது நடமிடு தாண்டவனே
அருட்பெருஞ் சோதியென் னுண்டவனே
நடராஜ மாணிக்க மொன்றதுவே
நண்ணுத லாணிப்பொன் மன்றதுவே
நடராஜ பலமது நம்பலமே
நடமாடு வதுதிரு வம்பலமே
நடராஜர் பாட்டே நறும்பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு
சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாந் தெருப்பாட்டு
அம்பலப் பாட்டே யருட்பாட்டு
அல்லாத பாட்டெலா மருட்பாட்டு
அம்பல வாணனை நாடினனே
அவனடி யாரொடுங் கூடினனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பத மாம்புகழ் பாடினனே
தந்தன வென்றுகூத் தாடினனே
நான்சொன்ன பாடலுங் கேட்டாரே
ஞான சிதம்பர நாட்டாரே
இனித்துயர் படமாட்டேன் விட்டேனே
என்குரு மேலாணை யிட்டேனே
இனிப்பாடு படமாட்டேன் விட்டேனே
யென்னப்பன் மேலாணை யிட்டேனே
சன்மார்க்கம் நன்மார்க்கம் நன்மார்க்கம்
சகமார்க்கந் துன்மார்க்கந் துன்மார்க்கம்
நாதாந்த நாட்டு நாயகரே
நடராஜரே சபா நாயகரே
நான் சொல்லு மிதுகேளீர் சத்தியமே
நடராஜ ரெனில்வரு நித்தியமே
நல்லோரெல் லார்க்குஞ் சபாபதியே
நல்வர மீயுந் தயாநிதியே
நடராஜர் தன்னட நன்னடமே
நடம்புரி கின்றது என்னிடமே
சிவகாம வல்லிக்கு மாப்பிள்ளையே
திருவாவ ஞைவன் சீர்பிள்ளையே
சிவகாம வல்லியைச் சேர்ந்தவனே
சித்தெலாஞ் செய்திடத் தேர்ந்தவனே
இரவா வரந்தரு நற்சபையே
யென்மறை புகழ்வது சிற்சபையே
என்னிரு கண்ணு ளிருந்தவனே
இறவா தருள மருந்தவனே
சிற்சபை யப்பனை யுற்றவனே
சித்தியெ லாஞ்செயப் பெற்றவனே
அம்பல வாணர்தம் அடியவரே
அருளர சானமணி முடியவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பெருஞ் சோதியைக் கண்டேனே
ஆனந்தத் தெள்ளமு துண்டேனே
இருட்பெரு மாயையை விண்டேனே
எல்லாஞ்செய் சித்தியைக் கொண்டேனே
கருணா நிதியே குணநிதியே
கதிமா நிதியே கலாநிதியே
தருணா பதியே சிவபதியே
தனிமா பதியே சபாபதியே
கருணா நிதியே சபாபதியே
கதிமா நிதியே பசுபதியே
சபாபதி பாதம் தபோ பிரசாதம்
தயாநிதி போதம் சகோதயவேதம்
கருணம் பரவர கரசிர பவபர
அருணம் பரதர ஹரஹர சிவசிவ
கனகர கரபுர ஹரசிர தரதர
கருணா கரபர சுரவர ஹரஹர
கனகசபாபதி பசுபதி நவபதி
அனகவு மசபதி பதிபதி சிவபதி
வேதாந்த பராம் பரசயசய
நாதாந்த நாடகம் பரசயசய
ஏகாந்த சர்வேச சமோ நம
யேகாந்த நடேச நமோநம
ஆதம்பர வாடக வதிசய சய
பதாம்புஜ நாடக சயசயசய
போதராத புரேச சிவநாம
நாதாந்த நடேச நமோநம
ஜாலசோ லகண காம்பா சாயக
காலகா முவள காம்பர சாயக
உபல சிரதலசுப கணவங்கண
சுபலகா தலகண பணவங்கண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயவர தகயதல புரிகாரண
உபயர தபத பரபரி பூரண
அகரவுக ரசுப கரவர சினகர
தகரவ கரதவ புரசிர தினகர
வகரசி கரதின கரசசி சரபுர
மகரவ சுரவ்ர புரஹர ஹர
பரமமந் திரிசக ளாகள சரணு
படனதந் திரநிக மாசம கரணு
அனந்தகோ டிகுண சரகர சொலிதா
அபண்டவே தசிர சரதர பவிதர
பரிபூ ரணஞான சிதம்பர
பதிகா ரணநாத பரம்பர
சிவஞான பதாடக நாடக
சிவபோத பரோகள கூடக
சகல லோக பரகாரக வாரக
பவளயோ கசரபூ ரக தாரக
சத்வபோ தகதா ரணதன்மய
பத்யவே தகபூ ரணசின் மய
வரகே சாந்தம சோதய காரிய
பரபா சாந்த சுகோதய சூரிய
பளிதநீ பகசோ பிதபா தர
லளிதரு பகஸ்தா பிதபாதர
அனுர்தகோ பசுருணும் புஜபாதா
அமிர்தரு பதருணும் புஜபாதா
அம்போருக பதஅரஹர சங்கர
சம்போசிவ சிவசிவ சிவசங்கர
சிதம்பர காசா பரம்பிர காசா
சிதம்பர ரேசா சுயம்பிர காசா
அருட்பிர காசம் பரப்பிர காசம்
அகப்பிர காசம் சிவப்பிர காசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடம்பிர காசம் தவப்பிர காசம்
நடப்பிர காசம் சிவப்பிர காசம்
நாதபரம் பரனே பரநாத சிதம்பரனே
நாததிகம் பரனே தசநாத சுதந்தரனே
ஞான நடத் தவனே பரஞானி யிடத் தவனே
ஞானவரத் தவனே சிவஞானபுரத் தவனே
ஞானசபா பதியே மறைநாடு சதாகதியே
தீனதயா நிதியே பரதேவி யுமாபதியே
புத்தந்தரும் போதா வித்தந்தருந் தாதா
நித்தந்தரும் போதா சித்தந்தரும் பாதா

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணம்

வெண்பா.

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகமென்னும் தேன்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் கிடைக்கும் இடங்கள்:

திரு. ந. வேல்முருகு
(பொருளாளர்)
சித்த ஆயுள்வேத வைத்தியர்,
14, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

திரு. சி. சிவனேசன்
(தலைவர்)
2, நொத்தாரிஸ் ஒழுங்கை,
மட்டக்களப்பு,

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org